விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 247 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 06 வியாழக்கிழமை (22.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 24ஆம் திகதிவரை மழை தொடரும்...
2 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் மினி சூறாவளி
6 ஆம் பக்கம் பார்க்க

## எந்த வேட்பாளர்களுக்கும் ஆதரவில்லை
கத்தோலிக்கத் திருச்சபை அதிரடி
7 ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியரின் அசிரத்தையால் எனது குழந்தை இறந்துவிட்டது
### வவு.பொலிஸில் தந்தை முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா வைத்திய சாலை வைத்தியர் ஒருவரின் அலட்சியத்தினால் தனது குழந்தை இறந்துள்ளதாக குழந்தையின் தந்தையினால் வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் நேற்று (21) முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இறந்த சிசுவின் தந்தையார் தெரிவிக்கும்போது,

வவுனியா, செட்டிகுளம், பிரமனாலங்குளம் பகுதியில் வசிக்கும் 15

## சகல மதங்களுக்கும் உரிய இடம் வழங்குவோம்
### அநுர குமார உறுதி



(கொழும்பு)

எமது ஆட்சியில் மதங்களுக்கு உரிய இடம் வழங்கப்படும். மதச் சுதந்திரம் உரிய முறையில் பேணப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளரு 15

## அரச நிதியில் தேர்தல் பிரசார நடவடிக்கை
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்

(கொழும்பு)

அரச நிதியைப் பயன்படுத்தித் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வோர் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுள்ளார். 15

# இராமர் பாலம் அமைந்தால் அது தமிழர்களுக்குப் பலம்
### தடுத்து நிறுத்த பிக்குகள் முயற்சி



(கொழும்பு)

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் இராமர் பாலம் அமைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் பௌத்த துறவிகள் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல்
## உச்ச நீதிமன்று இன்று தீர்ப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி மார்ச் 9, 2023 அன்று நடத்தத் தவறியமை குறித்து தேர்தல் ஆணையம் 15

## மானியம் வழங்க அமைச்சரவை அங்கீகரிப்பு

(கொழும்பு)

மீனவர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய்க்கு 25 ரூபாய் மானியம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தவிர தேயிலை உற்பத்தியாளர்களுக்கு 4,000 ரூபா உர மானியம் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தச் சலுகைகள் இன்று (22) முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-7)

## இலங்கையிலும் குரங்கு அம்மை



(கொழும்பு)

நாட்டில் முதலாவது குரங்கம்மை நோயாளர் ஒருவர் நேற்று இனங்காணப்பட்டுள்ளார் என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. (ந-7)

## கண்டிப் பெரஹராவிலும் ரணில் சொந்தக் கதை
### தேர்தல் விதி மீறல் என முறைப்பாடு

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகையின் பெரஹரா நிறைவுரையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் ரீதியாகவும் தேர்தலில் தனது வாக்கு வங்கியை அதிகரிக்கும் வகையிலும் ஆற்றியதன் ஊடாக தேர்தல் விதிமுறைகளினை மீறியுள்ளதாக 16

## ஸ்ரீ ரெலோ அணியினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு
### புளொட் லிங்கநாதனும் இணைந்தார்

(கொழும்பு)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமான புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் வவுனியா நகர சபைத் தலைவராகவும் மாகாண சபை உறுப்பினராகவும் இருந்த ஜி.ரி.லிங்கநாதன் நேற்று ஸ்ரீ ரெலோ அணியினருடன் இணைந்து 15

## அரசாங்க ஊழியர்களுக்கு ஒருபோதும் இல்லாத சம்பள அதிகரிப்பு
### பாராளுமன்றில் அமைச்சர் பந்துல உரை



(கொழும்பு)

நாட்டின் வரலாற்றில் இதுவரை காலமும் இல்லாத வகையில் அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு யோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) இடம்பெற்ற கலால்வரிச் சட்டம் மற்றும் கொழும்புத் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மன்னாரில் இளம் தாய் மரணம் மருத்துவர் பணி இடை நீக்கம்

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரியராஜ் சிந்துஜா என்ற இளம் குடும்பப் பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவரை பணிநீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் மத்திய சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் குழந்தையைப் பிரசவித்த 27 வயதான மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரிப் பெண், அதிக இரத்தப் போக்குக் காரணமாக கடந்த மாதம் 28ஆம் திகதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார்.

எவ்வாறாயினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வைத்தியர்கள் அவருக்குரிய சிகிச்சை அளிக்கவில்லை என்றும் வைத்தியர்களின் அசமந்தப் போக்குக் காரணமாகவே அவர் உயிரிழந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைய ஏலவே நான்கு பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.இரண்டு தாதியர்களுக்கும் இரண்டு குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இவ்வாறு பணியிடை நீக்கம் வழங்கப்பட்டுள்ளது.


இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவருக்கும் பணியிடை நீக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனினும் இதுவரையில் குறித்த கடிதம் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையைச் சென்றடையவில்லை என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அவசர கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலைப் பணிப்பாளர், மதத் தலைவர்கள், வைத்திய நிபுணர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் எதிர்கால நகர்வு தொடர்பாகவும் மக்கள் அச்சமின்றி வைத்தியசாலைக்கு வரும் சூழலை ஏற்படுத்தி முன்னோக்கி நகர்வோம் என்னும் நோக்கு நிலையில் பல விடயங்கள் ஆராயப்பட்டன. (ந-7)



தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கைக்கான சுவிற்சலாந்து தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெட்விங் ஹோட்டலில் இடம் பெற்றது.

# வவு. மருத்துவமனையில் சிசு இறந்த விவகாரம்

## விசாரணைகள் ஆரம்பம்

வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்காத காரணத்தினால் சிசு ஒன்று உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வடமாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரன தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட பெண், உரிய நேரத்துக்குள் தன்னை சத்திரசிகிச்சைக்கு எடுக்காமையாலேயே தனது குழந்தை இறந்ததாகக் குற்றம் சுமத்தும் காணொளி ஒன்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த வடமாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரன இவ்வாறான சிசு மரணங்கள் இடம்பெறும் போது அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தாய்," அனுமதிக்கப்படும் போதே சில மருத்துவப் பிரச்சினைகளைத் தெரிவித்திருந்ததாகவும், அதன் அடிப்படையிலேயே அவருக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் குறித்த காணொளியில் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பரிசீலனைகள் முன்னெடுக்கப்படும் எனவும் வடமாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ந-7)



கண்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலதா மாளிகை பெரஹராவை குறிக்கும் வகையில் தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உலகில் மிக நீளமான முத்திரையான 205 மி.மீ நீளமான நினைவு முத்திரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. (ந-7)

# 24 ஆம் திகதி வரை மழை தொடரும்

(கொழும்பு)

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் காற்று வேக மாறுபாடு காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது எனவும் குளிரான வானிலை நிலவும் அதேவேளை மிதமான வேகத்துடன் கூடிய காற்றும் வீசுவதற்கான வாய்ப்புள்ளது எனவும் வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 20 . 06 . 1950

உதிர்வு 20 . 08 . 2024



எமது பாடசாலையின் பழைய மாணவரும் ஆசிரியருமாகிய
**திரு.சி.அருட்சுதன்** அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் சிவலிங்கம் கலைவாணி

அவர்கள் 20.08.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

ஈரவிழிகளுடன்

(C-1024)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வேலணை மத்திய கல்லூரி**



# பதவி வெற்றிடம்

- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3127** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலுள்ள வைத்தியசாலைகளில் முறைப்பாடுகளுக்கான தொடர்பிலக்கங்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்

## ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகள், அரச மருந்தகங்கள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல் அடங்கிய பாதாதைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மாகாண சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், வைத்தியர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையை பெற்றுக் கொள்வதில் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன குறித்த பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாதையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் எனவும், பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார துறை உயர் அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் வலியுறுத்தினார்.

அத்துடன் ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் "அபயம்" பிரிவின் தொலைபேசி இலக்கமும் அறிவித்தல் பதாதையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு, அவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்த சுகாதாரத் துறையினர் மேலும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் சுட்டிகாட்டியுள்ளார். (நி-33)

# இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் உத்தேச பாலம்

## மல்வத்து பீடாதிபதி கவலை

(கொழும்பு)

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் விதத்தில் உத்தேச பாலத்தை அமைப்பது குறித்து மல்வத்து பீடத்தின்மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் கவலை வெளியிட்டுள்ளார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது உத்தேச பாலம் குறித்த கரிசனையை வெளியிட்டுள்ள அவர் பாலத்தை அமைப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் அதன் காரணமாக ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

உத்தேச பாலத்தினால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள், போதைபொருள் கடத்தல் அதிகரிப்பு குறித்தும் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் கருத்து தெரிவித்துள்ளார். (நி-6)

# எம்.பி பதவியை ராஜினாமா செய்தார் தலதா அத்துகோரள



(கொழும்பு)

தனது பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல நேற்று அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக அவர் விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இவர் 2004 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவராக இருந்த காமினி அத்துகோரளவின் சகோதரி ஆவார். காமினி அத்துகோரளவின் மரணத்திற்குப் பின்னர் அவர் அரசியலில் பிரவேசித்தார்.

அவர் 2004, 2010, 2015 மற்றும் 2020 தேர்தல்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றார்.

விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர்,

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு குழுக்களாகப் பிரிந்துள்ளமையால் மனசாட்சிப்படி செயற்படுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (நி-6)

# பாராளுமன்ற உறுப்பினராக பந்துலால் பண்டாரிகொட



(கொழும்பு)

பந்துலால் பண்டாரிகொட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மனுஷ நாணயக்கார பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளமையை அடுத்து குறித்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் பந்துலால் பண்டாரிகொட பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (நி-6)



# ஓராண்டு நினைவலைகள்

கடந்த 16.08.2023 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புச் செல்வம்

அமரர்.

**அனுசன் துளசி**

(கணித பாட ஆசிரியை-புனித சவேரியார் பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) - மன்னார்)




என் கையில் பிள்ளை
எமக்கே சொந்தம் என்றிருந்தோம்
எய்தவன் எடுத்தனன் என்று
எல்லோரும் என்முன் சாற்றினாரே
உன்னால் எங்கள் சந்ததி
சரித்திரம் படைக்கும் என்றிருந்தோம்
எம்மால் தொட்டுவிட முடியாத தூரமதில்
ஏனம்மா எம்மைவிட்டுச் சென்றாய்
ஆண்டாண்டு காலம் சென்றாலும்
ஆயுள் உள்ளவரை உன் நினைவு
எம்மை விட்டு அகலாது

அன்னாரின் ஓராண்டு ஆத்மசாந்தி பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் 22.08.2024 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

(சி-1022)

காந்தியூர், பருத்தித்துறை தென்மேற்கு, புலோலி.

தகவல்- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## குண்டு எறிதலில் யாழ்.மத்திக்கு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த தினோஜன் தங்கப் பதக்கத்தைக் கைப் பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக் கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின் றன.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வை.தினோஜன் 13.24 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தையும், யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.பிரதீப் 12.51 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித் துவம் செய்த கே.கிருஷாந் 11.94 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத் தையும் கைப்பற்றியுள்ளனர். (நி-6-90)

## உயரம் பாய்தல் போட்டி கொக்குவில் இந்து தங்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கிருஷனா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கிருஷனா 1.50 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.லிபின்ஷிகா 1.46 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சமிதா 1.46 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றி யுள்ளனர். (நி-6-90)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3202

**மாதுரி**




**வனஸ்பதி**




**மதி**




**சுயாதா**




**யது**




**வசந்த்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துகளால் இதுவரை பறிபோன 1,417 உயிர்கள்

## பொலிஸார் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் இந்த வருடத்தில் இதுவரை 1,417 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

வருடாந்தம் சுமார் 1000 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களால் உயிரிழப்பதாக போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

இந்திக்க ஹப்புகொட மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,3,000 இற்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் நடக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் இடம் பெறும் விபத்துகளில் மூன்றில் ஒன்று மோட்டார் சைக்கிள் விபத்து.

2023 இல் வீதி விபத்துகள் குறைந்துள்ளன. 2024 ஜனவரி 1 முதல் ஓகஸ்ட் 10 வரை, 1,352 ஆபத்தான வீதி விபத்துகளில், 1,417 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் 328 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்துள்ளார்.

மேலும் ஒவ்வொரு 10 வருடங்களிலும் 30,000 இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் விபத்துக்களில் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

அரச நிதியைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வோர் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பிரதமரிடம் நான் இந்த விடயத்தை வினவுகின்றேன். தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரச நிதியைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வது தடைசெய்யப்பட வேண்டும். அது சட்டவிரோதமான செயலாகும்.

ரிஷாட் பதியூதினுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட நிதியினை இடைநிறுத்தியுள்ளார்கள். அவர் தேர்தலில் எம்முடன் கூட்டணி அமைத்துள்ளமையினால் அவ்வாறான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டார்கள்.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்புக்கு தற்போது புதிதாக 300 மில்லியன் ரூபாயினை தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கியுள்ளனர்.

இது எந்த வகையில் நியாயமாகும் என கேட்க வினவுகின்றேன். தேர்தல் ஆணைக்குழு இந்த விடயத்தில் தலையீடு செய்ய வேண்டும் சட்டவிரோத செயற்பாடுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (நி-6)




## வினை தீர்க்கும் நல்லை வேந்தன்

ஆயிரம் கவி கோர்த்த மாலை-சூட
வந்தேன் நல்லைக் கந்தனிடம் காலை
வான் தொடும் கோபுரம் எங்கும்
விண் பாடும் சேவற்கொடி நாதம்
நாற்றிசையும் நல்லை நாயகன் நாமம்
நாடிவரும் பக்தர்நாவில் விளையாடும்
வேலாலே வினை தீர்த்து வைப்பான்- நல்லை
வாயிலிலே நின்றழைத்தால் எழுந்தோடி
வருவான்

**லிங்கேஸ்வரன், ஜனார்த்தன்.**

## நல்லைக் கந்தவேளே!

ஆணவங் கொண்டன்று அகந்தையி லாடிய
ஐயனாம் பிரமாவையும்
வேண்டு மென்றே "ஓமின்" பிரணவக் கருத்தையே
வேண்டியே நின்றபோது
நாணியே சிறுத்திட்ட பிரமனைச் சிறையிலே
நலியவிட் டறிவூட்டினாய்
காணவே நீதிநெறி நிலைநாட்டும் கொற்றவா
கா!நல்லைக் கந்தவேளே!



**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர்,**
**நவ.பாலகோபால்.**

# இராசிபலன்

22.08.2024
ஆவணி 06 , வியாழக்கிழமை
திருதியை முன்னிரவு 6.17 மணிவரை
உத்திரட்டாதி பின்னிரவு 3.19 மணிவரை
சுப நேரம்-7.35-9.05 மணிவரை
இராகு காலம்-1.35-3.05 மணிவரை
சங்கடகர கணபதி விரதம்
சந்திராஷ்டமம்-பூசம்.

**வளவன்**

**மேஷம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும்.

**ரிஷபம்:** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கடகம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**சிம்மம்:** வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதருப்து நல்லது, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

அதிஷ்டக்கா[illegible]வன் என்று பெயரெடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வியாழக் கிழமை நல்லூர் துர்க் காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள விக் னேஸ்வரி நரேந்திரா மாண வர்களின் குழு இசை நிகழ்வில் வயலின்- ஈ. வனஜா, மிரு தங்கம்-ம. லோகேந்திரன் மற்றும் கு.அனுஷன், வை. பிரதீபன், எஸ்.பிரபு, ம. கிறைஸ்ரா, கோ. திருநிறைச் செல்வி, உ. புஸ்பலட்சுஜி வி. ஜீவனா, ஞா.துஷாந்தி, ச.பானுரேக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


இதனைத் தொடர்ந்து 7.15-8.05 மணிவரை இடம்பெற வுள்ள இன்னிசையரங்கில் பாட்டு- என். சண்முகலிங்கன், வயலின்- கே. வேலதீபன், ஹார்மோனியம்- ந. செல்வச் சந்திரன், மிருதங்கம்-சி. துரை ராசா, தபேலா-ச.விமலசங்கர் ஆகியோர் நிகழ்த்தவுள்ள னர். (நி-6)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், கோடரிகள்,சவள்கள் மற்றும் காஸ் சிலிண்டர்கள் என்பன எதிர்வரும் 2024.09.07 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என பருத் தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள் ளார். (நி-6)

# ஆண்களுக்கான நீளம் பாய்தலில் சென்.ஜோன்ஸ் தங்க பதக்கம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான ஆண் களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஜே.சுஞ்சீவன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான ஆண் கள், பெண்களுக்கான மெய் வல்லுநர் போட்டிகள் யாழ்ப் பாணம் துரையப்பா விளை யாட்டு மைதானத்தில் நடை பெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஜெ.சுஞ்சீவன் 7.12 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் அச்சுவேலி மத்திய கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த எம்.டனு ஜன் 6.68 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத் தையும் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வை.யதுவர்ஷன் வெண் கல பதக்கத்தையும் கைப்பற் றியுள்ளனர். (நி-6-90)

# சட்டவிரோத மணல் அகழ்வு

## 5 பேர் கைது வாகனங்கள் பறிமுதல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங் களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற் றியுள்ளதுடன் ஐவரை கைது செய்து முள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் தலைமையின் கீழான பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட மூன்று டிப்பர் வாகனங்களும் அதற்கு முன்னைய தினம் திங்கட்கிழமை இரண்டு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்ட நிலையில் ஐந்து சந்தேக நபர்களும் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# சுழல் காற்றினால் தூக்கி எறியப்பட்ட கூரை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று ஏற்பட்ட சூறாவளி காற்று காரணமாக குருநகர் பகுதியில் ஐந்து மாடி குடியிருப்புப் பகு தியில் உள்ள கட்டடத்தின் கூரை பறந்து சேதமடைந்தது.

குறித்த அனர்த்தம் காரணமாக மூன்று குடும்பங்கள் பகுதியளவில் சேத மடைந்ததுடன் 11 பேர் பாதிப்படைந்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்ப் பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவால் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டது.

அதேவேளை பருத்தித்துறை பிர தேச செயலகத்திற்குட்பட்ட புலோலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட நாக்தம்பிரான் கோவில் மீது பனைமரம் முறிந்து விழுந்ததில் கோவில் முற்றாக சேதமடைந்தது. (நி-6-33-106)




# பெறுகை அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

மேலதிக முத்திரைத்தீர்வை நிதி

01. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வியாபாரப் பெயர்ப்பதிவைக் கொண்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** (தொலைபேசி இலக்கங்கள்: 021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **2024.08.22** ஆம் திகதியிலிருந்து **2024.09.04** ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் இடத்திலிருந்து **2024.08.22** ஆம் திகதியிலிருந்து **2024.09.04** ஆம் திகதி வரை காலை **9.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும், கேள்வி ஆவணத்தினை பெறுவதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபாரப் பெயர்ப்பதிவுச்சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், எனும் முகவரிக்கு 2024.09.05 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 30 (முப்பது) நாட்கள் (**2024.10.04**) வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | மீளளிக்கப்படாத வைப்பு | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NPS/CF-III/2024/Smart Boards | Procurement of Smart Boards | 1.69 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 2,000.00 | 30,000.00 | 2024.11.01 |

தலைவர்,பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேச சபை,

(நி-1023) 2024.08.22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த வேட்பாளருக்கும் ஆதரவில்லை

## கத்தோலிக்க திருச்சபை அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளருக்கும் தனது அங்கீகாரத்தை வழங்கப் போவதில்லை என இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்துள்ள போதிலும் எந்த வேட்பாளருக்கும் ஆதரவை வெளியிடப்போவதில்லை என கொழும்பு பேராயரின் பேச்சாளர் சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

மக்களே தங்களிற்கு யார் வேண்டும் என்பதை தீர்மானிக்கவேண்டும்.

நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நாட்டில் கத்தோலிக்க மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைகளில் மாத்திரம் ஈடுபடுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்காத போதிலும் கத்தோலிக்க மக்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு நீதியை நிலைநாட்டுவது குறித்தும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வோம் என சிறில்காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (216)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, தொழில்நுட்பவியளாளர் (GOV)
எதிர்பார்ப்பு: படித்த அரச உத்தியோகம் பெண்
தொ.இ: B/14736

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: ரேவதி
1 இல் செவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Car company
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/14737

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
7 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A\L, வியாபாரம்
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள படித்த பெண்
தொ.இ: B/14738

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/14758

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'
தகைமை/தொழில்:B.SC, Fashion buyer
எதிர்பார்ப்பு: Educated
தொ.இ: G/14760

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சித்திரை
1 இல் செவ்
கி.பா: 14 1/2
உயரம்:5'4"
தகைமை/தொழில்: Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14761

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


NLB NATIONAL LOTTERIES

சுப்பர் பரிசு
ரூ.100,000,000.00
(ரூ.10 கோடி)

ரூ.2,000,000/- அதிர்ஷ்டம்
தெனியாயவுக்கு





அடுத்த கோடீஸ்வரர் நீங்களா?

தன நிதானய

அதிகமதிகமாக கொள்வனவு செய்யுங்கள்

NLB தேசிய லொத்தர்
(நி-2375)



தெரிவுசெய்த பொருட்கள் 40% வரை கழிவு



JAFFNA EXPO - 2024

நிர்மாணம், கைத்தொழில், கல்வி, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்ட விழா

23 24 25 ஆம் திகதி ஆகஸ்ட் 2024

@ முற்றவெளி விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம், இலங்கை
மு.ப.10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

கட்டிடம் மற்றும் நிர்மாணப் பொருட்கள்
கட்டுமான ஆலோசனை சேவைகள்
கல்வி, மற்றும் தகவல் தொழில்நுட்பம்
கட்டுமான இயந்திரங்கள் மற்றும் கைத்தொழில் வாகனங்கள்
உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்
நிலைபேறான வலுசக்தி
கைத்தொழில் மற்றும் பொறியியல்
கமத்தொழில் வாகனங்கள்

(இ)

ALUMEX TVS asianpaints Blue Ocean SCOT CAMPUS வலம்புரி
DAN agro EME CIOB Ceylon Institute of Builders

+94 77 22 79 594
+94 72 21 22 709


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



## குழந்தைகளை கடத்தி லட்சங்களில் புரண்ட கும்பல்

### 6 குழந்தைகள் மீட்பு

(டில்லி)

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம், ஜெகநாத சாமி கோவில் அருகே உள்ள ஹார்பர் பூங்காவில் 5 மாத பெண் குழந்தையை விற்க உள்ளதாக சிறப்பு அதிரடி பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குழந்தையை விற்க முயன்ற 2 பேரை கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் விஜயவாடாவை சேர்ந்த பெண் ஒருவர் டில்லியில் இருந்து 15 மாதக் குழந்தையை விசாகப்பட்டினத்திற்கு கடத்தி வந்து இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்ய கொண்டு வந்தது தெரிய வந்துள்ளது.

அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் அனக்கா பள்ளி, அச்யுதா புரம், பெத்தாநாவா, ஒரிசாவில் ஜெய்பூர் ஆகிய இடங்களில் இருந்து 17 பேர் கொண்ட குழந்தை கடத்தல் கும்பலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கும்பலிடமிருந்த 6 குழந்தைகளை பாதுகாப்பாக மீட்டுள்ளனர். குழந்தைகளை கடத்தி வரும் கும்பல் டில்லி, மும்பை, ஐதராபாத் விசாகப்பட்டினம் ஆகிய மாநகரங்களை குழந்தை விற்பனை சந்தையாக கொண்டு செயற்பட்டுள்ளனர்.

கடத்தி வரப்படும் குழந்தைகள் 5 முதல் 7 லட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குழந்தை கடத்தலை தடுப்பதற்காக ஆந்திராவில் உள்ள அரசு வைத்தியசாலைகளில் கமராக்களை பொருத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (நி-6)

## போர் நி...

## நாடு தி...

(வோஷிங்டன்)—

9 ஆவது தட...
நாடுகளுக்கு பயண...
நிறுத்த முயற்சி...
திரும்பினார் அ...
அமைச்சர் ஆண்ட...

இஸ்ரேல்- ஹமாஸ் இடையில் போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா, எகிப்து, கட்டார் நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.


ஆனால் இந்த முயற்சிக்கு பலன் கிடைக்காமல் உள்ளது. காசா மக்களை பாதுகாப்பதற்கும், பிணைக்கைதிகளை மீட்பதற்கும் போர் நிறுத்தம் அவசியம் என இந்த மூன்று நாடுகள் கருதுகின்

## மலேசிய பிரதமர் இந்தியா விஜயம்

(டில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து இரு தரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து, இந்திய தொழிலாளர்கள் மலேசியாவுக்கு செல்வதை எளிதாக்குவது, மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைப்பது உள்ளிட்ட 8 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)



## குரங்கம்மை தொற்றை கட்டுப்படுத்த முடியும்

### உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

(ஜெனீவா)


"ஆபிரிக்க நாடுகளில் பரவிவரும் குரங்கு அம்மை நோயானது கொரோனா போன்ற தொற்று அல்ல என்றும் இதனை கட்டுப்படுத்த முடியும் என்றும்" உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் மட்டுமே சமீபகாலமாக தென்பட்ட குரங்கம்மை நோயானது, தற்போது ஐரோப்பிய, ஆசிய நாடுகளிலும் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், இது தொடர்பாக ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஐரோப்பாவுக்கான இயக்குநர் ஹன்ஸ் க்ளுஜ் குரங்கு அம்மை நோயானது புதிய கொரோனா தொற்று அல்ல என்று தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த குரங்கு அம்மை நோயை சமாளிக்க முடியும்.

ஐரோப்பாவில் ஒவ்வொரு மாதமும் குரங்கு அம்மை நோயின் கிளேட் 2 வகைமையினால், குறைந்தது 100 பாதிப்புகள் பதிவாவதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.




மேலும், குரங்கு அம்மை என்பது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய வைரஸ் என்றும் நெருக்கமான உடல் தொடர்பு மூலம் மனிதர்களிடையேயும் இது பரவக்கூடியது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். எவ்வாறாயினும், இதனை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பது சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## ஈரானில் பேருந்து விபத்து 28 பாகிஸ்தானியர்கள் உயிரிழப்பு



(டெஹ்ரான்)

ஈரானில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த 28 யாத்திரீகர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஈரானின் யாஸ்த் மாநிலத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


மேலும் 23 பேர் காயமடைந்துள்ளனர். 14 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். 7 ஆம் நூற்றாண்டில் மரணித்த ஷியா துறவியை வழிபடுவதற்காக சென்றுகொண்டிருந்தவர்களே விபத்தில் சிக்கியுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தத்தை உறுதி செய்ய முடியாமல் திரும்பினார் ஆண்டனி பிளிங்கன்

ன்)

தடவையாக மத்திய கிழக்கு பயணம் மேற்கொண்ட போதும் போர் ற்சிகளுக்கு பலன் கிட்டாது நாடு அமெரிக்க வெளியுறவுத்துறை ண்டனி பிளிங்கன்.



றன.

இதனால் அமெரிக்கா போர் நிறுத்தத்திற்கான பரிந்துரையை தயார் செய்தது. இந்த பரிந்துரைகளை இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக் கொள்ளும் வகையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சில தினங்களுக்கு முன் அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் சென்ற அவர், இஸ்ரேல் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தை முடிவின் இஸ்ரேல் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது.

அதன்பின் மத்தியஸ்தராக விளங்கும் எகிப்து, கட்டார் நாட்டு அதிகாரிகளை சந்தித்து பேசினார். அதேவேளையில் ஹமாஸ் அமைப்பினர் அமெரிக்காவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துள்ளது. இதனால் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படாமல் உள்ளது.

இந்த நிலையில் 9 ஆவது முறையாக பயணம் மேற்கொண்ட நிலையிலும் வெற்றிபெற முடியாமல் ஆண்டனி பிளிங்கன் நாடு திரும்பியுள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பாக ஆண்டனி பிளிங்கன் கூறுகையில் "எங்களுடைய செய்தி மிகவும் எளிமையானது. அது தெளிவானது. மிகவும் அவசரமானது எங்களுக்கு தேவை போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும்.

பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். தற்போது தான் இது எங்களுக்குத் தேவை. நேரம் மிகவும் முக்கியமானது" என்றார்.

நாங்கள் ஏற்றுக் கொண்ட முந்தைய பரிந்துரைகள் மாற்றப்பட்டுள்ளன. இஸ்ரேலின் புதிய நிபந்தனைகளுக்கு அமெரிக்கா இணங்குகிறது என ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் ஹமாஸின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா பதில் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 90 அடி உயர அனுமன் சிலை அமெரிக்காவில் திறப்பு





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 90 அடி உயர பிரம்மாண்ட அனுமன் சிலை திறந்து வைக்கப்பட்டது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹூஸ்டனில் சுகர்லாண்ட் என்ற பகுதியில் ஸ்ரீ அஷ்டலக்ஷ்மி கோயில் உள்ளது.


இங்கு 90 அடி உயரத்தில் பிரம்மாண்ட அனுமன் சிலை கட்டி முடிக்கப்பட்டு கடந்த 18 ஆம் திகதி ஸ்ரீ சின்னஜியர் சுவாமிகள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலைக்கு ஒற்றுமையின் சிலை என பெயரிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமெரிக்காவில் உள்ள அனுமன் சிலைகளில் மூன்றாவது மிகப்பெரிய அனுமன் சிலை இது என கூறப்படுகிறது. (நி-6)

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வேந்தர் பதவிக்கு இம்ரான்கான் போட்டி

(இஸ்லாமாபாத்)

ஊழல் வழக்கில் சிறையில் உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான், பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலை வேந்தர் பதவிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் ஊழல் புகாரில் சிக்கி சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

அவரால் அந்நாட்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியவில்லை.

இம்ரான்கான், பிரிட்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலையில் அரசியல், பொருளாதாரம் மற்றும் தத்துவவியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்.

இப்பல்கலை வேந்தராக உள்ள கிறிஸ் பட்டன் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த பதவிக்கு போட்டியிட இம்ரான்கான் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

அவரது கட்சியைச் சேர்ந்தவரும், லண்டனில் வசிப்பவருமான சயீத் ஜல்பிகார் புகாரி மூலம் வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார்.

இப்பல்கலை வேந்தரின் பதவிக்காலம் 10 ஆண்டுகள் ஆகும். ஒக்டோபர் மாதம் இறுதியில் ஓட்டுப்பதிவு நடைபெறும்.

இம்ரான்கான், ஏற்கனவே பிரிட்டனின் பிராட்போர்ட் பல்கலை வேந்தராக 2005 முதல் 2014 வரை பதவி வகித்து உள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கம்மைக்கு விரைவில் தடுப்பூசி சீரம் நிறுவனம் நம்பிக்கை


(கொழும்பு)

"உலகம் முழுவதும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள குரங்கம்மை நோய்த் தொற்றுக்கு விரைவில் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படும்" என இந்தியாவின் சீரம் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் சமீபத்தில் குரங்கம்மை பாதிப்பை பொது சுகாதார அவசரநிலையாக அறிவித்தது.

இந்நிலையில் உலகளாவிய சுகாதார அவசர நிலையைக் கருத்தில் கொண்டு ஆபத்தில் இருக்கும் மில்லியன் கணக்கான உயிர்களை காப்பாற்ற இந்த நோய்க்கான தடுப்பூசியை உருவாக்கும் பணியில் இந்திய சீரம் நிறுவனம் தற்போது தீவிரமாக செயற்பட்டு வருகின்றது என அதன் தலைமை நிர்வாக அதிகாரி தெரிவித்தார். (நி-6)

# பெரமுன உறுப்பினர் எதிர்க்கட்சியில் இணைவு



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கு எதிர்க்கட்சியில் இணைய தீர்மானித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்காகவும் நாட்டின் பொருளாதாரத்திற்காகவும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2020 பொதுத் தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கருணாதாச கொடித்துவக்கு மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு 114,319 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 150 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 300 | 160 | 300 |
| தக்காளி | 300 | 300 | 320 | 240 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 250 | 180 | 120 | 200 |
| கோவா | 350 | 340 | 380 | 350 | 350 |
| கரட் | 350 | 350 | 400 | 350 | 400 |
| பூசணி | 150 | 150 | 130 | 80 | 120 |
| புடோல் | 80 | 140 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 300 | 150-200 | 300 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250 | 150-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 400 | 300 | 300 | 300 | 320 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 100-150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 300 | 300 | 150 | 150-200 | 150 |
| லீக்ஸ் | 420 | 350 | 380 | 350 | 400 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 250 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 100 | 50-80 | 120 |
| போஞ்சி | 600 | 600 | 600 | 450 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 120 | 180 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 130 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 500 | 250-300 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 70 | 60-110 | 80-130 |
| இராசவள்ளி | -- | 950 | 650 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 400 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 70 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 60 | 60 |

# இன்று ஒரு தகவல் 217



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மண்பானை மகத்துவம்

எங்க அம்மா அழகாக ஒரு மண் குடம் வாங்கிக் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டு போய் என் மனைவியிடம் கொடுத்தேன். அவர் உடனே அதை பொன்குடமாக மாற்றிவிட்டார் என்றார் ஒருத்தர்.

எப்படிங்க அது? என்று கேட்டேன். ஒன்றும் இல்லை. கீழே போட்டு உடைத்து விட்டார். அப்படி என்றால் அது எப்படி பொன்குடமாக ஆகும் என்றேன்.

நீங்கள் பழமொழி கேட்டதில்லையா? மாமியார் உடைத்தால் மண்குடம்! மருமகள் உடைத்தால் பொன்குடம்! என்று. இது மருமகள் உடைத்தது அது தான் பொன் குடம் என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் அவர்.

மருமகள் உடைக்கவில்லை என்றால் கூட இந்த காலத்திலே மண்குடம் - பொன்குடம் மாதிரித்தான். மண் பானையிலே அவ்வளவு மகத்துவம் இருக்கிறது. தண்ணியை சுத்தமாக்கிக் குடிக்க வேண்டும் என்பதற்காக இப்போது பல பேர் என்ன செய்கிறார்கள் தெரியுமா?

வாட்டர் ஃபில்டர் உபயோகப்படுத்துகிறார்கள் அதே மாதிரி தண்ணீர் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஃபிரிட்ஜ் உபயோகப்படுத்துகிறார்கள். இது இரண்டு காரியத்தையும் செலவே இல்லாமல் நமக்கு செய்து கொடுக்கிறது மண்பானை! உலோகப் பாத்திரங்களிலே தண்ணீர் ஊற்றி வைத்திருந்தோம் என்றால் அதிலே கிருமிகள் அதிகமாகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் மண்பானையிலே தண்ணீரை ஊற்றி வைத்தாள் அப்படி ஆகுவது இல்லை. தண்ணீரிலே உள்ள கிருமிகளையெல்லாம் மண்பானை இழுத்துக் கொள்ளுகிறது! குடிநீர் சுத்தமாகிறது! அந்தக் காலத்திலே நமது முன்னோர்கள் இதை நன்றாகப் புரிந்து வைத்து இருக்கிறார்கள். இந்தக் காலத்திலே ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டு நாங்களும் அதைப் புரிந்துகொள்ள ஆரம்பித்து இருக்கின்றோம்.

மண்பானை என்பது ஒரு தலைசிறந்த வோட்டர் ஃபில்டர் என்று சொல்லுகிறார்கள் விஞ்ஞானிகள். ஐதராபாத்திலே உள்ள உணவு ஆராய்ச்சிக் கழகம் இதைக் கண்டுபிடித்து சொல்லியிருக்கிறது. இதற்கு அப்புறம் நாம் சும்மா இருக்கலாமா? உடனே கிளம்பிப் போய் ஒரு மண்பானை வாங்கிக் கொண்டு வந்துவிட வேண்டியது தானே! பானையை எடுத்து தட்டிப் பாருங்க! வெண்கலப் பாத்திரத்தைத் தட்டுவது மாதிரி சத்தம் வந்தது என்றால் அது நல்ல பானை.

பானைக்கு வெளிப்பக்கம் கருப்புத் திட்டா தெரியும். பளபளப்பாகவும் இருக்கும். பானை நன்றாக வெந்திருக்கும் என்று அர்த்தம் வேறு ஒன்றுமில்லை. சிலது சாம்பல் பூத்து சொர சொரப்பா இருக்கும். அது வேண்டாம். வெளிப்பக்கம் இருக்கிறது மாதிரியே உள்பக்கமும் கருப்பு திட்டு இருந்தா அதை வாங்க வேண்டாம். கொஞ்ச நாளிலே உடைந்து விடும்.

புதுப்பானையிலே தண்ணீரை ஊற்றியவுடனே உஸ் என்று ஒரு சத்தம் வரும் உள்ளே பாம்பு இருந்து விட்டு சீறுவது போல இருக்கு என்று பயந்து விடாதீர்கள். பானையிலே களிமண்ணோடு மணல் கலந்திருக்கும் அல்லவா அந்த மணல் தண்ணியை உறிஞ்சும் சத்தம் தான் அது.

வெயில் காலத்திலே நமக்கு வேர்க்கிறது அல்வா அதே மாதிரி பானைக்குள்ளே தண்ணி ஊற்றியவுடனே அதனுடைய வெளிப்பக்கம் வேர்க்கும். கொஞ்ச நாளிலே நுண்கிருமிகள் துளைகளை அடைத்து விடுவதனாலே வேர்க்கிறதில்லை அதனாலே பரவாயில்லை! பானைக்கு வெளிப்பக்கமோ உள்பக்கமோ சிமெண்ட் பூசியிருந்தால் அது வேண்டாம். அதனாலே உஷ்ண காற்று உள்ளேயே தங்கியிருக்கும். தண்ணீர் குளிர்ச்சியாக இருக்காது. இந்தக் கோடை காலத்திற்கு மண்பானை தண்ணீரை விட சிறந்த பானம் வேறு எதுவும் கிடையாது! மட்டமாக தயாராகிற கலர்– சோடா - சர்பத் இதையெல்லாம் வாங்கி கன்ன பின்னா என்று குடிக்காதீர்கள். அதிலே சேர்ந்திருக்கின்ற கலரும் உடம்பிற்கு கெடுதல். சில பேர் தண்ணீரையும் சுத்தப்படுத்தாமலே சேர்த்திருப்பார்கள்.

ஜுரம், வயிற்றுப்போக்கு கூட வரலாம். இளநீர், நுங்கு, எலுமிச்சம்பழம், மோர் இவையெல்லாம் கிடைத்தால் விடாதீர்கள். இருந்தாலும் செலவில்லாமல் கைக்கு எட்டின தூரத்திலே இருக்கிற மண்பானைத் தண்ணிக்கு ஈடு எதுவுமில்லை. உடனடியாக உண்மையாக தாகத்தை தணிக்கிறது அது தான்.

என்ன சார்? எங்கே கிளம்பிட்டீங்க? பானை வாங்கிறதுக்குத் தானே. சரி போயிட்டு வாங்க?

இன்றைக்கு இதைக் கேட்டவுடனே நாளைக்கு சில வீடுகளிலே என்ன நடக்கும் என்பதைப் பற்றி ஒரு சின்னக் கற்பனை. ஒரு பெரிய சங்கீத வித்துவான். கடம் வாசிக்கிறவர். ஒரு கச்சேரிக்கு புறப்பட்டுக் கொண்டு இருக்கிறார். புறப்படுவதற்கு முன்பு மனைவியை கூப்பிட்டார். கச்சேரிக்கு போயிட்டு வருகிறேன். அதற்கு முன்பு உன் கையாலே ஜில் என்று ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து தாருங்கள்! குடிச்சிட்டு போறேன் என்றார்.

அந்த அம்மா கொண்டு வந்து கொடுக்கிறார். இவர் வாங்கிக் குடிக்கிறார். வெயிலுக்கு இதமாக இருக்கிறது. மண்பானை தண்ணீரா? காலமறிந்து, இடமறிந்து, சமயமறிந்து நடக்கிறதாலே உன்னை எவரும் மிஞ்ச முடியாது ரொம்ப நன்றி என்றார்.


உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்றார் அந்த அம்மா. ஏன்? என்று கேட்டார் இவர்.

நேற்றைக்கு இன்று ஒரு தகவல் கேட்டேன். இன்றைக்கு நமது வீட்டிலே மண்பானையான உபயோகப்படுவதே உங்க கடம் தான் ரொம்ப நன்றி என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணை அல்ல; சர்வதேச விசாரணையே வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி வலியுறுத்து



(நெளுக்குளம்)

சரணடைந்தவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்களா? என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் நேற்று முன்தினம் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி முன்பாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம், எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும் என கூறி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்து.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.


கொக்குத்தொடுவாயில் கடந்த வருடம் ஜூலை மாதம் மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த இடம் பொலிஸாருடைய நீதிமன்றத்தினுடைய, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று 52 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

அந்த அகழ்வு பணியின் போது, பல தகட்டு இலக்கங்கள், விடுதலைப் புலிகளுடைய அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற தகட்டு இலக்கங்கள் மற்றும் அவர்களுடைய உடலகளிலே, துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்ததற்கான தடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இங்கே தாய்மார் குறிப்பிட்டது போன்று அந்த சீருடைகள் பழுதடைந்து உக்கி, இறந்து போகாமல் என்று சொன்னால் அது மிக அண்மையிலேதான் புதைக்கப் பட்டிருக்க வேண்டும். அந்த வகையிலே இது 2009 ஆம் ஆண்டு சரணடைந்தவர்கள் அல்லது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர் களை, கொன்று புதைத்திருக்கிறார்கள் என்பது எங்களுடைய சந்தேகம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொர்பான மரபணு பரிசோதனை கூட சர்வதேச சமூகத்தால் பொறுப்பெடுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். அதேவேளை உள்ளக விசாரணை செயற்பாட்டை முற்றாக நிராகரித்து சர்வதேச விசாரணையை நாங்கள் வலியுறுத்துகிறோம் என மேலும் தெரிவித்தார். (நி-6-299)

# கண்ணகைபுரம் வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்



(தருமபுரம்)

வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைகளத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்ணகைபுரம் வீதிப் புனரமைப்பு பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 40 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த வீதியின் 2.5 கிலோமீற்றர் தார் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

இதன்போது ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து குறித்த வீதிப் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த வீதிப் புனரமைப்பு வேலைகளினை கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.கருணாநிதி, கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.நிஷியந்தன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இந் நிகழ்வில் உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் அங்கத்தவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (நி-6-316)

# நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவை அமையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மேற்கிற்கான நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவை அக்கராயன் குளத்தின் கீழ் இயங்குவதற்கான நடவடிக்கையினை எடுக்கும் படி அக்கராயன் குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுகள் உள்ளன. கிளிநொச்சி கிழக்கிற்கான நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு இரணைமடுக் குளத்தின் கீழும் கிளிநொச்சி மேற்கிற்கான பொறியியலாளர் பிரிவு கிளிநொச்சி நகரத்திலும் இயங்குகின்றது.

அக்கராயன் மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவிற்கான கட்டடம் அமைப்பதற்கான காணி கூட கந்தபுரத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் கந்தபுரத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் அக்கராயன் குளத்தின் கீழ் மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவு இயங்குமானால் அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், குடமுருட்டிக்குளம், புதுமுறிப்புக் குளம் ஆகிய குளங்களின் கீழான விவசாயிகள் பெரும் நன்மையடைவார்கள். (நி-6-350)

# திருவையாறு மகாவித்தியாலயத்திற்கு 6 தங்க வர்ண பதக்கங்கள்



(அக்கராயன்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தினால் 2024 ஆம் ஆண்டிற்கான சுற்றாடல் முன்னோடி தேசிய பாசறை நிகழ்வு அண்மையில் மகரகம வளாகத்தில் நடைபெற்றது.

இப்பாசறையில் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தங்க வர்ண பதக்கத்திற்கான மதிப்பீட்டில் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தில் இருந்து 6 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தங்க வர்ண பதக்கம் அணிவித்ததோடு இப்பாசறையில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் களையும் பெற்றுக் கொண்டனர்.

த.தரணிகா, நீ.சுயாத்திகா, ச.கார்நிலா, இ.கயைரசன், த.தமிழ்நிலவன், லோ.துளசிகன் ஆகிய மாணவர்களே தங்க வர்ண பதக்கங்களை பெற்றுக் கொண்டனர். (நி-6-350)

## 'சிறுபொறி' இதழின் ஓராண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தின் வெளியீடாக மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு வெளிவருகின்ற சிறுபொறி சஞ்சிகையின் ஓராண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அதிதிகளாக வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி.கவிதா உதயகுமார், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன் சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கோட்டங்களின் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் ஓவியப் போட்டி, திருக்குறள் போட்டி என்பனவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும், சிறு பொறி 5 இதழ் வெளியீடும், கலை நிகழ்வுகளும், மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில் சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் "முட்டை" நாடக ஆற்றுகையும், ஓவியக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றிவரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று பகல் 9.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடப்பாண்டிற்கான இரண்டாவது கூட்டமாக அமைந்ததுடன், இதன்போது அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் திட்டம் மற்றும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேலும், இவ்வருடத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட திட்டங்களின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 30 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். இக் கூட்டத்தில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், கரைச்சிப் பிரதேச செயலாளர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், திட்டத்துடன் சம்பந்தப்பட்ட திணைக் களங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர், உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 563





நதிக்கரையிலிருந்து குறுக்கே இறங்கிப் பல்லக்கு எங்கேயோ போகிறது என்பதை அறிந்து கொண்டான். அவனுடைய கையின் கட்டுக்களையும், காலின் கட்டுக்களையும் அவிழ்த்துக்கொண்டு விடுதலை பெறுவது அவ்வளவு கஷ்டமான காரியம் அன்று.

பல்லக்கிலிருந்து குதிப்பதும் எளிதாகத்தான் இருக்கும். குதிரையோ பின்னால் வந்து கொண்டிருந்தது. அந்த ஏழெட்டுப் பேரையும் உதறித் தள்ளி விட்டுக் குதிரையின் மீது பாய்ந்தேறிச் செல்வதும் அவனுக்கு முடியாத காரியமாகாது. அவ்விதம் செய்யலாமா என்று யோசித்தான். ஆனால் ஏதோ ஒன்று குறுக்கே நின்று தடை செய்தது. அந்தப் பல்லக்கினுள்ளே ஓர் அபூர்வமான மணம் சூழ்ந்திருந்தது. அது முதலில் அவனுக்கே உற்சாகத்தை அளித்தது. அதன் கவர்ச்சியிலிருந்து விடுவித்துக் கொண்டு போக எளிதில் மனம் வரவில்லை. இந்தப் பல்லக்குத் தன்னை எங்கே கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறது? நந்தினியிடந்தான் சேர்க்கும் என்று ஊகிப்பதற்குக் காரணங்கள் இருந்தன.

அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் இலேசாகத் தலைகாட்டியது. வர வர அது பெரும் ஆர்வமாக வளர்ந்தது. அதற்கு எவ்வளவோ ஆட்சேபங்கள் தோன்றின. ஆட்சேபங்களையெல்லாம் மீறி ஆசை விஸ்வரூபம் கொண்டது. என்னதான் செய்து விடுவாள் நம்மை? என்னத்துக்காகத்தான் அழைக்கிறாள் என்று பார்த்து விடலாமே? ஏதாவது தெரிந்து கொள்ள முடிந்தால் தெரிந்து கொள்ளலாமே? சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி செய்யத் தன்னால் முடியாமலா போய்விடும்? மறுபடியும் அவளைப் பார்க்கும்படியான சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது சந்தேகந்தான். தஞ்சாவூருக்குப் போக வேண்டிய அவசியம் இனி ஏற்படப் போவதில்லை. அங்கே போவது அபாயகரம். அதைக் காட்டிலும் வழியிலேயே பார்த்து விடுவது எளிதான காரியம். இன்னும் ஒரு தடவை அவளையும் பார்த்துத்தான் வைக்கலாமே?


ஆம் ஆம்! நந்தினியைப் பார்க்க வேண்டும் என்பதற்கு இன்னொரு அவசியமான காரணமும் இருந்தது. இலங்கையில் அவன் பார்த்த அந்த ஊமை அரசி! அவள் நந்தினி போலிருப்பதாகத்தான் எண்ணியது சரியா? அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

இவ்விதம் வந்தியத்தேவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவன் தலை சுழன்றது. தூக்கம் வருவது போலத் தோன்றியது. இல்லை, இல்லை! இது தூக்கம் இல்லை! பகலிலே தான் அவ்வளவு நேரம் தூங்கியாகி விட்டதே! இது ஏதோ மயக்கம். இந்தப் பல்லக்கில் சூழ்ந்துள்ள மணந்தான் நம்மை இப்படி மயக்குகிறது. ஐயோ! இது என்ன பயங்கர அபாயம்! பல்லக்கிலிருந்து குதித்து விட வேண்டியது தான்.

வந்தியத்தேவன் கைக் கட்டை அவிழ்த்துக் கொள்ள முயன்றான் முடியவில்லை, கைகள் அசையவேயில்லை. எழுந்து உட்கார முயன்றான் அதுவும் முடியவில்லை. கால்களை அடித்துக் கொள்ளப் பார்த்தான் கால்களும் அசைய மறுத்தன. அவ்வளவுதான்! கண்ணிமைகள் மூடிக்கொண்டன. அறிவு விரைவாக மங்கியது, மயக்கம் அவனை முழுவதும் ஆட்கொண்டது.

வந்தியத்தேவன் மயக்கம் தெளிந்து கண் விழித்த போது பழைய நினைவுகள் வந்து பல்லக்கிலிருந்து குதிக்க முயன்றான். ஆனால் விந்தை! விந்தை! அவன் இப்போது பல்லக்கில் இல்லை! விசாலமான ஓர் அறையில் இருந்தான். அந்த அறை தீபங்களினால் பிரகாசமாக விளங்கிற்று. இங்கேயும் ஏதோ மணம் சூழ்ந்திருந்தது! ஆனால் பழைய மாதிரி மணம் இல்லை, அகிற் புகையின் மணம் போலத் தோன்றியது முன்னே அவன் அனுபவித்தது அறிவை மயக்கிய மணம், இது அறிவைத் தெளிவு செய்த மணம். படுத்திருந்த ஆசனத்திலேயே எழுந்து உட்கார்ந்தான்! சுற்று முற்றும் பார்த்தான். கதவு ஒன்று திறந்திருந்தது. வந்தியத்தேவன் ஆவலுடன் பார்த்தான்.

(தொடரும்)





## சிறுவர் அரங்கம்

# ஏழைகளின் நெஞ்சக் குமுறல்

ஒரு ஊரில், ஒரு விறகு வியாபாரி இருந்தான். ஏழை, எளியவர்கள் காட்டில் கஷ்டப்பட்டு, விறகுகளை வெட்டிக் கொண்டு தலையில் சுமந்து வருவார்கள். அவர்களிடம் மிகவும் குறைவான விலைக்கு வாங்குவான். அதிகமான விலைக்கு விற்பது விறகுக் கடைகாரனின் வழக்கம். இப்படியாக, அவன் பணக்காரனாகி விட்டான். வீடு கட்டி வசதியாக வாழ்ந்தான்.

அந்த ஊரில் அவனைத் தவிர வேறு வியாபாரி இல்லை. அதனால், அவன் கேட்கும் விலைக்கு விற்பார்கள், சொன்ன விலைக்கு வாங்குவார்கள். சில ஆண்டுகளாக, அந்த விறகுக் கடைக்காரனை அறிந்த பெரியவர் ஒரு நாள், "ஏழைகளை வஞ்சித்து, அவர்கள் வயிற்றில் அடிக்காதே இப்பொழுது வசதியாக வாழ்கிறோமே என்று இறுமாப்புக் கொள்ளாதே. பிறரை வஞ்சிப்பவன், ஒரு நாள் வஞ்சிக்கப்படுவது உறுதி" என்று புத்திமதி கூறி எச்சரித்தார்.

பெரியவரைப் பார்த்து, "உம்முடைய புத்திமதி எனக்குத் தேவை இல்லை. விற்பவர்கள் விற்கிறார்கள் வாங்குகிறவர்கள் வாங்குகிறார்கள், நீர் ஏன் குறுக்கிட வேண்டும்? உம்முடைய வேலையை நீர் பார்த்துக் கொள்ளும், என் தொழிலில் தலையிட வேண்டாம்" என்று அலட்சியமாகப் பேசி, ஏசினான் விறகு வியாபாரி தொடர்ந்து அவன் போக்கிலேயே தொழிலை நடத்திக் கொண்டிருந்தான். சில நாட்களுக்குப்பிறகு, விறகுக் கடைக்காரன் வீட்டின் அடுக்களையில் நெருப்புப் பற்றி, வீடு முழுவதும் தீ பரவி, அடுத்தாற் போல் இருந்த விறகுக் கிடங்கும் தீப்பற்றி எரிந்து எல்லாம் சாம்பல் ஆயின.

விறகுக் கடைக்காரன், உடுத்தியிருந்த உடையோடு நின்று "எப்படி தீப்பற்றியது என்பது தெரியவில்லையே" என்று புலம்பிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஆறுதல் கூற எவருமே அவன் அருகில் செல்லவில்லை.

அப்பொழுது, அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த பெரியவர், "ஏழை மக்களின் நெஞ்சத்திலிருந்து எழுந்த நெருப்பினால் தான் இப்படி பற்றி எரிந்து சாம்பலாயிற்று" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உறுதியாக இருக்கும் போது, வெற்றி உங்களது கழுத்து மாலையாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மூவரில் யார் வென்றாலும் பொதுத் தேர்தல் நிச்சயம்

ஜனாதிபதித் தேர்தல் களம் தென்பகுதியில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

வெற்றி யாருக்கு என்பது தொடர்பிலான கருத்துக் கணிப்புகள் கண்டபாட்டில் நடப்பதையும் காண முடியும்.

அதாவது, சமூகவலைத்தளங்கள் நடத்துகின்ற கருத்துக் கணிப்புகளால் எல்லாம் குழம்பிப் போயுள்ளது போன்ற பிரமை ஏற்பட்டுவிட்டதெனலாம்.

இஃது ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதைக் காலம் நிச்சயம் வெளிப்படுத்தும்.

எனவே அது தொடர்பில் ஊகங்களையும் கணிப்புக்களையும் வெளியிடுவது பக்கச் சார்பாக அமைந்துவிடும் என்பதால், ஊகத்தின் அடிப்படையில் வெற்றி யாருக்கு எனக் கூறுவதைத் தவிர்த்துவிடலாம்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு உடனடியாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்பதை மட்டும் சர்வநிச்சயம் எனக் கூறமுடியும்.

ஆயினும் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆச்சரியமான வெற்றி கிடைத்தால் மட்டும் பாராளுமன்றக் கலைப்பு தாமதமாகும் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் பொதுத் தேர்தல் உடனடியாக நடத்தப்படுமா என்று கேட்டால், நிச்சயம் என்று பதிலளிக்கலாம்.

ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவதானது ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடும் கோபத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்திவிட்டது.

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவார் என ரணில் விக்கிரமசிங்க இம்மியும் நினைத்தாரில்லை.

ஏனெனில் அரகலயப் போராட்டத்தின் போது மகிந்த ராஜபக்ஷ தரப்பைக் காப்பாற்றியவர் ரணில் விக்கிரமசிங்க.

அரகலய நடந்தபோது, ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ தரப்புடன் தொடர்பாடலை மேற்கொண்டிருந்தார்.

தவிர, ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதில் எத்துணை கருசனையாக இருந்தாரோ, அந்தளவுக்கு ராஜபக்ஷ தரப்பைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலும் ரணில் விக்கிரமசிங்க கருசனை கொண்டிருந்தார்.

இருந்தும் அதனை நன்றிக்கடனாக ராஜபக்ஷக்கள் கருதவில்லை.

மாறாக, எங்களுக்குக் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தானமாக்கினோம்.

ஆனால் அந்த நன்றியை மறந்த ரணில் விக்கிரமசிங்க, நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், நாமல் ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவியைக் கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

எனவே ரணில் நன்றி மறந்துவிட்டார் என்பது ராஜபக்ஷ தரப்பின் கருத்தாகவுள்ளது.

இந்நிலையில் ரணில், சஜித், அநுர ஆகிய இம் மூவரில் யார் வெற்றி பெற்றாலும் அதன் அடுத்த கட்ட நடவடிக்கை பாராளுமன்றக் கலைப்பாகவே இருக்கும்.

### இலங்கை பௌத்த நாடு

# அதிகாரப்பகிர்வு என்ற கதைக்கே இடமில்லை - நாமல்

*(அநுராதபுரம்)*

இலங்கை ஓர் ஒற்றையாட்சியுடைய பௌத்த நாடு எக்காரணம் கொண்டும் பொலிஸ், காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

ஏனைய வேட்பாளர்களைப்போல் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களை தேர்தல் காலத்தில் மாத்திரம் ஏமாற்ற நாம் விரும்பவில்லை என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில்நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு ஒற்றையாட்சி நாடாகும். நம்மவர்கள் இந்த ஒருமித்த நாட்டைப் பாதுகாப்பதற்கே போராடினர். இந்த பௌத்த நாட்டுக்குள் அனைத்து மதத்துக்கும் கௌரவத்தை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். அதனை தற்போது செய்கின்றோம்.

அதேபோன்றுமாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்க முடியாது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தாய், தந்தை மற்றும் இளையோரை தேர்தல் காலத்தில் மாத்திரம் ஏமாற்றுவதற்கு தாம் விரும்பவில்லை. ஏமாற்றுவதால் எவ்வித பயனுமில்லை.

எங்களால் முடியும் என்பதையே முடியும் என்று கூறமுடியும். நாங்கள் தமிழ் கலாசாரத்தை பாதுகாப்போம். மொழி உரிமையையும் பாதுகாப்போம்.

ஆனால், பொலிஸ் மற்றும் காணி அதிகாரத்தை வழங்க முடியாது என்பதுடன், வடக்குக் கிழக்கையும் நாங்கள் ஒருபோதும் இணைக்க மாட்டோம் என்பதையும் தெளிவாக அறிவிக்கின்றோம் என்றார். (ந-7)

# நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு நிறைவேற்று அதிகாரமே மூலகாரணம்

## பாராளுமன்றில் றொஷான் ரணசிங்க விளாசல்

*(கொழும்பு)*

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னரே இந்த நாட்டில் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. நாட்டுக்கு சுமையாக உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும். அதற்கான சூழல் தோற்றம் பெற்றுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் றொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஊழலற்ற அரச நிர்வாகத்தை தோற்றுவிப்பதற்காகவே கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரச நிர்வாகத்தை தோற்றுவித்தோம். இருப்பினும் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. இவ்வாறான பின்னணியில்தான் 2022 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

1972 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் இரண்டு தேர்தல்கள் மாத்திரமே காணப்பட்டன. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தியதன் பின்னர் நான்கு தேர்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறிய அரச நிர்வாக அலகினைக் கொண்ட இந்த நாட்டுக்கு நான்கு தேர்தல்கள் அவசியமற்றவை.

1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்தத் தலைவர்களும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதாக சோபித தேரருக்கு வாக்குறுதி வழங்கியது எனினும் அதிகார கதிரையை கண்டவுடன் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான வரைவினை முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் முன்வைத்துள்ளார். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை இந்த நாட்டுக்குச் சுமையானது. ஆகவே பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் பிரதமர் பதவியை வலுப்படுத்தி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்றார். (ந-7)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை 35 ஆயிரத்தைக் கடந்தது

*(கொழும்பு)*

நாட்டில்டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தைக் கடந்துள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இம்மாதம் 20 ஆம் திகதி வரை 35 ஆயிரத்து 375 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் அதிகளவான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் இதுவரை 14 ஆயிரத்து 448 பேர் பதிவாகியுள்ளனர். (ந-7)

# வசந்த மண்டப கும்பாபிஷேகம்

வடமராட்சி கிழக்கு, முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் ஆலயத்தின் வசந்த மண்டப கும்பாபிஷேகமும், மணவாளக்கோல அபிஷேகமும் இன்று வியாழக்கிழமை(22) நடைபெறவுள்ளது.

காலை 9.00மணி முதல் 9.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் வசந்த மண்டப கும்பாபிஷேகமும் தொடர்ந்து மணவாளக்கோல அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

அதேவேளை, இன்று (22) இரவு 7.30 மணி முதல் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ந-7,60)

# வாகன விபத்து ஒருவர் படுகாயம்

*(வவுனியா)*

வவுனியா விளக்குவைத்த குளம் ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹயஸ் ரக வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வவுனியாவில் இருந்துயாழ்ப்பாணம்நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியும் ஹயஸ் வாகனமும் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04

இதனால் தேசிய சங்கத்தின் நிலை பிரித்தானியரின் பார்வையில் சந்தேகத்தை ஏற்படுத்தியதோடு சவாலாகவும் காட்சியளித்தது. இதனால் பிரித்தானியர் இலங்கையில் ஏற்பட்ட அத்தகைய சங்கத்தை வலுவிழக்கச் செய்வதன் மூலம் தமது அரசியல் அதிகாரம் நீடித்திருக்க வழிமேற்கொள்ள முயற்சித்தனர்.

அதாவது பிரித்தானியர் தமது பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டனர். இதற்கு சாதகமாக சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரதிநிதித்துவம் பற்றிய உடன்படிக்கை அமைந்திருந்தது. இதனை சாதகமாகப் பயன்படுத்தி அப்போதைய தேசாதிபதி வில்லியம் மனிங் என்பவர் சிங்கள் தமிழ்த் தலைவர்களை பிளவுபடுத்துவதில் வெற்றி கண்டார்.

**பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம்-1957**

பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் 1957 ஜூலை 26, 1957 அன்று அப்போதைய இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தைக் குறிக்கும்.

தனிச் சிங்களச் சட்டம், இந்தியத் தமிழ் தோட்டத் தொழிலாளர் குடியுரிமை பறிப்பு, தமிழ்ப் பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்களினால் ஆத்திரமடைந்து பல்வேறு வகையான (பொதுவாக வன்முறையற்ற) போராட்டங்களில் ஈடுபட்ட தமிழர்களை ஓரளவுக்கு சமாதானப்படுத்தும் நோக்குடன் இந்த ஒப்பந்தம் பண்டாரநாயக்காவால் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வொப்பந்தத்தை எதிர்த்து ஒக்டோபர் 4, 1957 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனா உட்பட பல சிங்களத் தலைவர்கள் பலரும் கண்டிக்கு நடத்திய எதிர்ப்பு யாத்திரை காரணமாகவும் பௌத்த பிக்குகள் பலரும் தீவிரமாக எதிர்த்தமையாலும் இவ்வொப்பந்தம் நடைமுறைப் (அமுல்) படுத்தப்படவில்லை.

பேச்சுவார்த்தை 1957 ஏப்ரல் மாத பிற்பகுதியில் ஆரம்பமாகியது. இனப்பிரச்சினைக்கான தீர்வாகப் பிராந்திய சபைகளை நடைமுறைப் படுத்தும் நோக்கத்தைப் பிரதமர் பண்டாரநாயக்க கொண்டிருந்தார். இதற்கான நகல் மசோதா ஏற்கனவே தயாரிக்கப்பட்டு 17.05.1957 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகிய போதிலும் பிரதமருக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே பேச்சுவார்த்தை ஆரம்பமாகியிருந்ததால் பாராளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படவில்லை.

தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகள் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் சரத்துகளாகின. அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கவும் தமிழரசுக் கட்சியின் சார்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் 1957 ஜூலை 26 ஆம் திகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்காகத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு கொழும்பில் கூடியபோது வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர். அ.அமிர்தலிங்கமும் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் செ.இராசதுரையும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஒப்பந்தத்தை ஏற்பது சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடுவதாகிவிடும் என்று அவர்கள் வாதிட்டனர். "சமஸ்டி ஆட்சியமைப்புக்கான அடிப்படையை இவ்வொப்பந்தத்தின் மூலம் உருவாக்கியுள்ளோம்" என்று செல்வநாயகம் அவர்களுக்கு விளக்கமளித்தார்.

**பின்வருவன ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்**

1. வடமாகாணம் ஒரு பிராந்திய அலகாகவும் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்திய அலகுகளாகவும் இருத்தல்.

2. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கு உட்பட்டதாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்திய அலகுகள் மாகாண எல்லைகளுக்கு அப்பாலும் ஒன்றிணைவதும் ஒரு பிராந்திய அலகு பலவாகப் பிரிவதும்

3. பிராந்திய சபைகளுக்கு நேரடியான தேர்தல்.

4. விவசாயம், கூட்டுறவு, காணிகளும் காணி அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், கடற்தொழில், வீடமைப்பு, சமூக சேவைகள், மின்சாரம், நீர்ப்பாசனம், வீதிகள் உட்பட பிராந்திய சபைகளுக்கான விடயங்களைச் சட்டத்தில் உள்ளடக்குதல்,

5. மத்திய அரசாங்கம் பிராந்திய சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்.

6. வரி விதிப்பதற்கும் கடன் பெறுவதற்கும் பிராந்திய சபைகளுக்கு அதிகாரம் உண்டு.

7. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழி.

இவ்வொப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருப்பதோடு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி அடையமுடிந்திருக்கும். பண்டா-செல்வா ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் 1957 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் சமஷ்டி அமைப்பொன்று தோன்றியிருக்கும் என்று அரசறிவியல் ஆய்வாளரகள் கூறுகின்றனர்.

**டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் - 1965**

டட்லி சேனநாயக்க அவர்களும், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் 24.03.1965 இல் சந்தித்துத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கமைய, ஒரு நிரந்தர அரசாங்கத்தை அமைக்கும் நிமித்தம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று டட்லி சேனநாயக்கா ஒப்புதல் அளித்தார்.

1. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும், தமிழ்மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமாற்ற உரிமையுள்ளவன் என்பதே - தன் கட்சியின் கொள்கை என்பதையும் டட்லி சேனநாயக்க விளக்கினார்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்ட பூர்வமான நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழே நீதிமன்ற மொழியாக இருப்பது தான் - தன் கட்சியின் கொள்கை என்று டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொள்கிறார்.

3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில், மக்கள் வசமுள்ள அதிகாரங்களுக்கேற்ப- இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி, சட்டங்களுக்கமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்கு உண்டென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. இலங்கைப் பிரஜை காணிப் பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தி அமைக்கப்படும். குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படும் போது - வட, கிழக்கு மாகாணங்களில் கீழ்க் காணும் விடயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும் எனவும் டட்லி சேனநாயக்க ஏற்றுக்கொண்டார்.

(அ) வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணங்களிலுள்ள காணியற்றவர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) இரண்டாவதாக - வட, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

(இ) மூன்றாவதாக- இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடங் கொடுத்து ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.

**ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அனைத்துக் கட்சி மாநாடு -1984**

தமிழ்பேசும் மக்களின் உள்ளக் குறைகளைத் தீர்க்க அனைத்துக் கட்சி மாநாடு நடத்தப்படும் என்று 1977 தேர்தலுக்கு முன்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா வாக்குறுதி அளித்தார். எனினும் அவர் தேர்தலில் வென்று பதவி ஏற்று ஒரு மாதத்துள், 1977 ஒகஸ்ட் 12ஆம் திகதி, தமிழருக்கு எதிராக மூண்ட கலவரத்தில் 300 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

இலங்கைத் தமிழருக்காக வாதாடுவதற்கு அமைச்சரவைத் தகுநிலை கொண்ட ஒரு பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பும்படி 1977 ஒகஸ்ட் 24 ஆம் திகதி தமிழ்நாடு அரசு இந்திய மத்திய அரசை வேண்டியது. இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரே அந்த அலுவலைக் கவனிப்பார் என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் தெரிவித்தார்.

வாக்குறுதி அளித்தவாறு அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டாமலேயே மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஜே.ஆர். ஜெயவர்த்தனா முன்மொழிந்தார். தமிழ் இளைஞர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மாவட்டஅபிவிருத்தி சபைத் தேர்தல்களில் பங்குபற்றியது.

அந்த முன்னணிக்கு அது பேரிடியாய் மாறியது. ஒருபுறம் நேரடி ஆயுதப்போராட்டத்தை நாடிய இளைஞர்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளை எதிர்த்தார்கள். மறுபுறம் மத்திய அரசோ நிர்வாகத்தைப் பன்முகப்படுத்த மறுத்தது. சபைகளின் முடிவுகள் அனைத்தும் மத்திய அரச பிரதிநிதியினால் கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்ச நீதிமன்று...

தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்களின் தீர்ப்பு இன்று காலை ஐவர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு மூலம் அறிவிக்கப்பட உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி நிதி ஒதுக்கப்படாமையினால் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அரச நிதியில்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பிரதமரிடம் நான் இந்த விடயத்தை வினவுகின்றேன். தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரச நிதியைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வது தடைசெய்யப்பட வேண்டும். அது சட்டவிரோதமான செயலாகும்.

ரிஷாட் பதியூதினுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியினை இடைநிறுத்தியுள்ளார்கள். அவர் தேர்தலில் எம்முடன் கூட்டணி அமைத்துள்ளமையினால் அவ்வாறான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டார்கள்.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்புக்கு தற்போது புதிதாக 300 மில்லியன் ரூபாயினை தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கியுள்ளனர்.

இது எந்த வகையில் நியாயமாகும் எனக் கேட்க வினவுகின்றேன். தேர்தல் ஆணைக்குழு இந்த விடயத்தில் தலையீடு செய்ய வேண்டும். சட்டவிரோத செயற்பாடுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ந-7)

## வைத்தியரின்...

நான் எனது மனைவியை பிரவசத்திற்காகக் கடந்த 17ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையின் 7ஆம் விடுதியில் அனுமதித்திருந்தேன். மறுநாள் அவருக்கான மருந்துகள் வழங்கப்பட்ட நிலையில் அவரது பன்னீர்க்குடம் உடைந்துள்ளது. இதனைத் தாங்க முடியாத எனது மனைவி அங்குள்ள தாதி ஒருவருக்கு விடயத்தினைத் தெரிவித்திருந்தார்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் தொலைபேசியில் கவனம் செலுத்திக்கொண்டு, அது தொடர்பில் கவனமெடுக்காமல் அது ஒரு பிரச்சினையுமில்லை எனத் தெரிவித்திருந்தார். பின்னர் வலிக்குரிய மருந்தினை மனைவிக்குக் கொடுத்துவிட்டு உறங்குமாறு தெரிவித்திருந்தார்.

மறுநாள் வைத்தியசாலைக்கு வந்த வைத்திய அதிகாரி ஒருவர் சீசர் செய்து குழந்தையினை எடுத்திருக்கலாம் தானே என கடமையில் இருந்த வைத்தியரைப் பேசியிருந்தார். பின்னர் மீண்டும் மாலை 5 மணிக்கு எனது மனைவியை சிகிச்சைக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

பலமணி நேரமாகியும் அவர் வெளியில் வரவில்லை. இதற்குள் 7ஆம் விடுதியில் குளிரூட்டி இயங்கவில்லை எனத் தெரிவித்து 5ஆம் விடுதிக்கு எனது மனைவியை மாற்றியுள்ளனர். பின்னர் தாதி ஒருவர் தொலைபேசி அழைப்பை எடுத்து என்னை வைத்தியசாலைக்கு வருமாறு அழைத்திருந்தார். அங்கு சென்றபோது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் எனது குழந்தையினை அனுமதித்திருந்தார்கள்.

அங்குள்ள வைத்தியரிடம் கேட்டபோது 5ஆம் விடுதியில் இருந்து குழந்தையை இங்கு அனுமதிக்கும்போதே உயிரில்லாத நிலைமையிலேயே தந்தனர். இருப்பினும் குழந்தையின் இதயத்துடிப்பினை நாம் மீட்டுள்ளோம். எனினும் குழந்தையின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துக் குழந்தையை எனக்குக் காட்டினர். பின்னர் நேற்று முன்தினம் (20) இரவு எனது குழந்தை இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

எனவே, வைத்தியரின் அசமந்தப் போக்கினால் எமக்கு நடந்த கொடுமைக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும். எனக்கு நீதி கிடைக்காமல் நான் சிசுவின் சடலத்தினைப் பொறுப்பெடுக்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பாகச் சிசுவின் தந்தையால் வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சுகுணனிடம் கேட்டபோது இது தொடர்பில் உள்ளக விசாரணை இடம் பெற்று வருவதாகத் தெரிவித்தார். (ந-7,250)

## சகல மதங்...

மான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மத நல்லிணக்கம் மதங்களுக்கிடையிலான சுதந்திரம் என்பன உரிய முறையில் பேணப்படும்.

அதேவேளை பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்கமாட்டோம். நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழும் சூழல் உருவாக்கப்படும் என்றார்.

முஸ்லிம் மதத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-7)

## ஸ்ரீ...

ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் ஸ்ரீ ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் உதய ராசா உட்பட முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். (ந-7)

## இரா...

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இராமர் பாலம் அமைக்கப்படுமாக இருந்தால், அது இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் போதைவஸ்துக் கடத்தல்கள் அதிகரிக்கும் என்பதான குற்றச்சாட்டுக்களை பௌத்த பிக்குகள் முன்வைத் [illegible] [illegible] குற்றச் சாட்டுக்களை அவர்கள் முன்வைத்தாலும் இராமர் பாலம் அமைக்கப்படுமாயின், அது ஈழத்தமிழர்களுக்குப் பெரும் பலமாக அமைந்துவிடும் என்ற ஒரே காரணத்துக்காகவே இராமர் பாலத்தை பௌத்த பிக்குகள் எதிர்ப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் இராமர் பாலம் இரு நாடுகளின் ஒத்துழைப்புடனேயே இடம் பெறும் என்றும் இது ஒரு நீண்டகாலத்திட்டம். ஓரிரு வருடங்களுக்குள் அதனை நிறைவு செய்ய முடியாது.

குறைந்தது ஐந்து, ஆறு ஆண்டுகள் நீடிக்கலாம் எனவும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார். (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத — திகதி 2024.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 5572 — T 4 2 2 3 8 2
அத சம்பத — T 2 3 8 2 — சீட்டிழுப்பு இலக்கம் 147

தன நிதானய — திகதி 2024.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 1602 — A 14 17 31 61 A — 43322

மெகா பவர் — திகதி 21/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1920 — Y 24 10 62 64 74 — 32351

லக்கி 7 VIP — திகதி 2024.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0398 — Q 8 0 4 1 0 8 Q

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3814 — சீட்டிழுப்பு திகதி 21.08.2024 — H 33 40 68 75 — H 76046

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0881 — மீனம் 03 24 30 56 மீனம் — 82282 — 14

உத்தியோகபூர்வ முடிவுகள் — 21.08.2024 — வெற்றி வாரம் 280 — வர்ணம் பச்சை — F 0 3 7 1 8 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,482,236.00 — 51371 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2546 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 21.08.2024 — தினம் புதன்கிழமை — 28 40 43 67 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,150,780.00

சனிதா — திகதி 2024.08.21 — வெற்றி வாரம் 4707 — 21 29 59 67 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,184,763.60 — 22190

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4258 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.08.21 — தினம் புதன்கிழமை — 03 05 33 50 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00 — 151618

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — E 07 02 03 64 69 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 540,244,547.00 — 1722 — இள நீலம் — 21.08.2024 — புதன்கிழமை

ஜயோதா Jayoda — திகதி 2024.08.21 — வெற்றி வாரம் 2053 — வர்ணம் மஞ்சள் — 16 38 39 40 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,967,144.40

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2372 — சீட்டிழுப்பு திகதி 2024.08.21 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,451,972.00 — 01 10 47 66 N — 499737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. வைத்தியசாலையில் குழந்தை இறப்பு உறவினர்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் பிறந்த சிசுவின் மரணத்திற்கு நீதி கோரி வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இறந்த சிசுவின் உறவினர்கள் மற்றும் பொது மக்களால் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலையின் முன்பாகவுள்ள வீதியில் அமர்ந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வவுனியா வைத்தியசாலை வைத்தியர்களின் அசமந்தத்தால் இறந்த சிசுவிற்கு நீதி வேண்டும் எனவும், வைத்தியசாலையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை. சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண இது தொடர்பில் கவனம் செலுத்தி ஒரு விசாரணைக் குழுவை அமைத்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் எனவும், தொடரும் மருத்துவ மாபியாக்களின் அசமந்தப் போக்கிற்கு தீர்வு காண அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் காரணமாக வைத்தியசாலை பிரதான வாயில் அருகில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,250)

## அரசாங்க...

துறைமுக நகரம் தொடர்பான சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள இணக்கப்பாட்டுக்கு அமைய மேற்படி வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு அனைத்து அரசாங்க சேவைக்கும் நன்மை கிட்டும் வகையில் தீர்மானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் என்ற வகையில் டாக்டர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு இடைக்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அரசாங்க சேவையில் நிலவும் இந்தச் சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அந்த குழுவின் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படும் போது அரசாங்க சேவையில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் சம்பளம் 55 ஆயிரம் ரூபாவாக அமையும். அந்த வகையில் வரலாற்றில் ஒரு போதும் இல்லாதவாறு சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே நாட்டின் வரலாற்றில் இதுவரை காலமும் இல்லாத வகையில் அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்யும் யோசனைகளை அரசாங்கம் முன்வைத்துள்ள நிலையில் அதற்கு எதிராக செயற்பட்டு நிரந்தரமாக நாட்டை அழிவுக்குள் உட்படுத்த வேண்டாம் எனத் தெரிவித்த பந்துல குணவர்த்தன 2048 ஆம் ஆண்டுக்குள் வறுமையற்ற நாடாக இலங்கையைக் கட்டியெழுப்பவும் தனிநபர் வருமானம் 20 ஆயிரம் டொலராக அதிகரிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார். (ந-7)

## கண்டிப்...

தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புனிதத் தந்தம் மற்றும் தலதா மாளிகையை அடிப்படையாகக் கொண்ட இந்த பிரசார திட்டம் பொதுமக்களின் பணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலை, கலாசாரம் தொடர்பான உரையை ஆற்றி இப்பெரும் கலை விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து கைவினைஞர்களுக்கும் அரச தலைவர் நன்றி தெரிவிக்கும் மரபு ரீதியான உரை, அரசியல் ஆதரவைக் கோரியதாக அமைந்திருந்தது.

பெரஹராவின் இறுதி அறிக்கையின் பின்னர், அரச தலைவர் என்ற வகையில் பெரஹராவில் இணைந்து கொண்ட அனைவருக்கும் சுருக்கமாக நன்றி தெரிவித்த ஜனாதிபதி, பின்னர் தனது அரசியல் திட்டத்தை விளக்கியுள்ளார்.

திட்டத்தை விளக்கிய முறை தேர்தல் விதிகளுக்கு மாறானது என்று முறைப்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு அரச உத்தியோகத்தர்கள் உட்பட சுமார் அறுநூறு பேருக்கு இராப்போசன விருந்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(278)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள் கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1749)
076 825 7716 (ஆகாஸ்)

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759
(216)

மொத்தக் கொள்வனவு
400g அங்கர் பால்மா மற்றும் யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
Happy Super market
உரும்பிராய்
077 773 0900
(277)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1025)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1025)

இந்தியன் விசா சேவைகள்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(277)

கடை விற்பனைக்கு
- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 3 கடைகளும்
- யாழ் ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 3 கடைகளும்

உடன் விற்பனைக்கு உண்டு.
077 723 2535
(1753)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.